6. அறிவிப்பு.

*முன்பண மானியக் கோரிக்கைகள், **1996-97** வெட்டுத் தீர்மானங்கள் அளிப்பது குறித்து.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களால் பேரவைக்கு அளிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கை தொடர்பாக தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 186 (2)-இன்கீழ் வெட்டுத் தீர்மானங்களைப் பேரவை உறுப்பினர்கள் முன்மொழியலாம். தற்போது அளிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கை, ஓர் இடைக்கால அறிக்கை என்பதால், முக்கியமான மானியக் கோரிக்கைகளான 15 - காவல்துறை, 17 - கல்வி, 19 - பொதுச் சுகாதாரம், 20 - வேளாண்மை, 24 - தொழில்கள் ஆகியவைமீது மட்டும் வெட்டுத் தீர்மானங்களைத் தாக்கல் செய்யலாம். அவ்வாறு செய்ய விரும்பும் உறுப்பினர்கள், ஒவ்வொரு மானியக் கோரிக்கைமீதும் தலா 5 வெட்டுத் தீர்மானங்கள் வீதம், 22-2-1996 அன்று வியாழக்கிழமை, பிற்பகல் 3.00 மணிக்குள், சட்டப் பேரவைச் செயலகத்தில் சேர்ப்பிக்கலாம்.

பேரவை உறுப்பினர்களுக்கு, சிற்றுண்டி தயாராக இருக்கிறது. பேரவை முடிந்ததற்குப் பிறகு, உறுப்பினர்கள் அங்கு சென்று சிற்றுண்டி அருந்திச் செல்லலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு நிதியமைச்சர் உங்களுக்கு அதற்கு முன்னரே கொடுத்திருக்கிறார். ஆகவேதான், அவர் கொடுத்ததற்குப் பிறகு நான் கொடுக்கிறேன்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும், வியாழக்கிழமை, 22-2-1996 காலை 10.00 மணிக்குக் கூடும், வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 5.50 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

40. 1994-95 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் நான்காவது ஆண்டறிக்கை. [*1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் *சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619*-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது]. *(தமிழ், ஆங்கிலம்).*

மேற்கோள் நூல்

41. 1994-95 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் ஆண்டறிக்கையும், கணக்குகளும். [1974 ஆம் ஆண்டு நீர் (மாசுத் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் (மத்தியச் சட்டம் 6/1974) 39 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

42. 1993-94 ஆம் ஆண்டிற்கான புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா போக்குவரத்துக் கழகத்தின் முதலாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

43. 1994-95 ஆம் ஆண்டிற்கான சோழன் போக்குவரத்துக் கழகத்தின் இருபத்தி நான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

44. 1994-95 ஆம் ஆண்டிற்கான டாக்டர் அம்பேத்கார் போக்குவரத்துக் கழகத்தின் இரண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

45. 1994-95 ஆம் ஆண்டிற்கான புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். போக்குவரத்துக் கழகத்தின் மூன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

46. 1994-95 ஆம் ஆண்டிற்கான இராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகத்தின் ஒன்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்.

ஏதுமில்லை

தமிழ்நாடு சட்டமன்ற நூலகம்
16 அக் 2000
சென்னை-600 009